# அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

கூட்ட எண்.59/2020 நாள். 29.05.2020

## தனி அலுவலர் அவர்களின் மே 2020 மாதம் சாதாரணக் கூட்டப்பொருள்

29.5.2020ம் நாள் வெள்ளிகிழமை மாலை 4.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரணக் கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சி மே 2020 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

**பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்**

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | மே 2020 | 0 | 0 | 16 | 9 | இல்லை | இல்லை |

**பொருள் எண். 2**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் மே 2020 மாதத்தின் நாட் குறிப்புகள்

**அலுவலக குறிப்பு :** கூட்டத்தில் பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 3**

தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2020–21ன் கீழ் இந்கராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.300.00 இலட்சத்தில் கீழ்காணும் பணி மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. கீழ்கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | சாலையின் நீளம் (கிலோ மீட்டர்) | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | **சிப்பம்–1**<br>வார்டு எண்.4 – குருசாமி நகர் 4வது, 1வது குறுக்கு தெரு, வார்டு எண்.5 – சுப்ரமணிய பாரதி தெரு, வார்டு எண்.9 – தியாகராய முதலி தெரு, வார்டு எண்.16 – சீனிவாசபுரம் 2வது மெயின் ரோடு, வார்டு எண்.17 – கன்னியம்மன் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.2 – கருணாநிதி நகர் 3வது குறுக்கு தெரு, வார்டு எண்.5 – பாலாஜி நகர் 12வது தெரு, பாலாஜி நகர் 3வது மெயின் ரோடு, | 1.895 | **140.00** |

| | | | |
|---|---|---|---|
| | வார்டு எண்.17 – பாரி நகர் வாசுகி தெரு ஆகிய பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | | |
| 2 | **சிப்பம்–2**<br>வார்டு எண்.2 – பம்ப் அவுஸ் ரோடு, வார்டு எண்.4 – வெங்கடேஸ்வரா நகர் திருவள்ளுவர் தெரு, வார்டு எண்.10 – யாதவாள் தெரு, வார்டு எண்.13 – வ.உ.சி தெரு ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.5 – பாலாஜி நகர் 15வது தெரு, திருநகர் அண்ணா தெரு, வார்டு எண்.7 – அண்ணா நகர் 2வது குறுக்கு தெரு, அண்ணா நகர் 4வது தெரு, அண்ணா நகர் 8வது தெரு மற்றும் வார்டு எண்.4 கண்ணகி தெரு ஆகிய பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 2.171 | 160.00 |
| | **மொத்தம்** | **4.066** | **300.00** |

**அலுவலகக்குறிப்பு :**மன்றம் அனுமதியளிக்கலாம்.

2. 2020–21ம் ஆண்டிற்கு தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் இயற்கை இடர்பாடுகள் மற்றும் புதிய குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் குழாய் அமைக்கும் பணிக்காக தோண்டப்பட்டு பழுதடைந்த சாலைகள் தேர்வு செய்யப்பட்டதை அனுமதியளிக்கலாம்.

**3.** மேற்படி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் அனகாபுத்தூர் நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் மேற்படி ரூ.300.00 இலட்சத்தினை முழு மான்யமாக வழங்க கோரி கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்க மன்றம் அனுமதியளிக்கலாம்.

**<u>பொருள் எண். 4</u>**

அனகாபுத்தூர் நகராட்சிக்கு சொந்தமான நீர்நிலைகளில் மறு சீரமைப்பு செய்யும் பணியாக, கல்மடுவு பூங்காவை ஆழப்படுத்துதல், தூர் வாருதல் மற்றும் கரையை பலப்படுத்துதல் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.50.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கவ்மடுவு பூங்காவை ஆழப்படுத்துதல், தூர் வாருதல் மற்றும் கரையை பலப்படுத்துதல் செய்யும் பணி மேற்கொள்ளுதல் | 50.00 |

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதியளிக்கலாம்.
**2.**மேற்படி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் அனகாபுத்தூர் நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் மேற்படி ரூ.50.00 இலட்சத்தினை முழு மான்யமாக வழங்க கோரி கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்க மன்றம் அனுமதியளிக்கலாம்.

**<u>பொருள் எண். 5</u>**

அனகாபுத்தூர் நகராட்சியில் கொரோனா நோய்தொற்று ( n COVID-2019) வைரஸ் காய்ச்சல் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை குறித்து மாவட்ட அட்சி தலைவர், செகல்பட்டு அவர்களின்அறிவுரையின் படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 1 முதல் 18 வரை உள்ள பகுதியில் வசிக்கும் குடும்ப உறுப்பினர்களின் விவரம் மற்றும் அவர்களின் ஆரோக்கியம் குறித்து விவரங்களை வீடுவீடாக சென்று கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் 15000 படிவங்கள் அச்சடித்திடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.30 ஆயிரம் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணியை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.414 / 2020 / எச்1)

**<u>பொருள் எண்.6</u>**

அனகாபுத்தூர் நகராட்சியில் கொரோனா நோய்தொற்று ( n COVID-2019) வைரஸ் காய்ச்சல் குறித்து மான்புமிகு தமிழக முதலமைசர் அவர்களின் அறிவிப்பினை தொடந்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின் படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ந.க.எண்.516/2020/A3 நாள் 25.03.2020 ல் தெரிவித்துள்ளபடி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான அனைத்து தளவாட பொருட்கள் மற்றும் கிருமி நாசினி உள்ளிட்ட பொருட்களை ஒரு மாத தேவைக்கு வாங்கி இருப்பு வைத்துகொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி பொது சுகாதார பிரிவின் கொரோனா நோய்தொற்று ( n COVID-2019) வைரஸ் காய்ச்சல் நோய் தடுப்பு பணியின் தேவையான பொருட்களை சப்ளை செய்ய பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணியை மேற்கொள்ளப்பட்டு அதற்கான செலவு தொகை ரூ.1.80 க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணியை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.414 / 2020 / எச்1)

<u>பொருள் எண்.7</u>

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணிகளுக்கு தேவையான ஆண்டி வைரஸ் பொருத்தும் பணிக்கு 15.5.2020ம் தேதியன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில், கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீடு (லட்சத்தில்) | பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளி சதவீதம் (மதிப்பீட்டிற்கு ) | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| 1 | நகராட்சியில் உள்ள கணிணிகள் ஒரு சர்வர் உள்பட (Server Computer) அனைத்து பிரிவுகளில் உள்ள மொத்த 25 கணிணிகளுக்கு ஆண்டி வைரஸ் பொருத்துதல் மற்றும் இரண்டு ஆண்டிற்கு பராமரிப்பு பணி செய்தல் (AMC) | 2.00 | M/s BinaryCure Technoloy | Sriram Computers Services |

**அலுவலக குறிப்பு :** மேற்படி பணிக்கு வரபெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.96 / 2020 / இ1)

<u>பொருள் எண்.8</u>

அனகாபுத்தூர் நகராட்சியில் கொரோனா நோய்தொற்று ( n COVID-2019) வைரஸ் காய்ச்சல் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை குறித்து மாவட்ட அட்சி தலைவர், செங்கல்பட்டு அவர்களின்அறிவுரையின்படி இந்நகராட்சி நோய்தொற்று பணிகளை மேற்கொள்ள தூய்மைபணிகள் மற்றும் இதர பணிகள் பொதுமக்கள் அலுவலத்தில் வரும் போது கை சுத்தம் செய்யும் இயந்திரம் மற்றும் அதற்குரிய திரவம் வாங்கி உபயோகிக்க பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணிமோள்ள அதற்கான தோராய செலவினம் ரூ.35 ஆயிரம் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணியை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.414 / 2020 / எச்1)

**<u>பொருள் எண்.9</u>**

12.05.2020ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | பூந்தண்டலம் விவசாய கிணற்றில் இருந்து நகராட்சி லாரி மூலம் குடிநீர் எடுத்தல் பணி | 4.50 | எம்.நித்தியானந்தம்<br>ஜி.சுரேஷ் | குறைவு<br>அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி